# கற்பனை உள்ளம்

அவள் ஒரு 'எழுத்தாளி'யாகிக் கொண்டு வந்தாள். அச்சிலே ஏறிக்கொண்டு வந்தன அவளுடைய 'விஷயதானங்கள்'. தான் செய்யும் தானத்தைப் பத்திரிகைகள் ஏற்கவேணுமே என்று அதுநாள் வரை சமுசயமும், அதைரியமும், ஆனால் ஆசையும் கொண்டிருந்த அவளுடைய உள்ளத்திலே ஒரு பூரிப்பும், உத்ஸாகமும் முளைவிட்டுக் கொண்டு வந்தன.

முதற்கதை அச்சிலே வருவதாகத் தெரிந்ததும் தன் சந்தோஷத்தை அடக்கிக் கொள்ளத்தான் பார்த்தாள். "எவ்வளவோ பேர், எவ்வளவோ எழுதும்போது இது பிரமாதமாக்கும்!" என்று நினைத்துக்கொண்டு, அடக்கமாக அடங்கியிருக்கப் பார்த்தாள். ஆனால் அவள் புருஷன் 'பறையறைந்தான்'. மனைவியின் எழுத்துத் திறமையைப் பிறர் அறிய வேண்டுமென்று ஆசைப்படாதா ஒரு புருஷனின் உள்ளம்?

அவன் வெளியே சொல்லத்தொடங்கியதும், இவளும் நழுவவிட்டாள் சந்தோஷத்தை. அவருடைய தாய் தந்தையர், பந்துக்கள், நண்பர்கள் அறிந்தார்கள். அவளுடைய பெற்றோர், உறவினர், சிநேகிதைகள் தெரிந்துகொண்டார்கள், "ராஜி"யின் முதற்கதை எப்போது எதிலே வெளியாகிறது என்று.

கதை வெளியாயிற்று - எல்லோரும் அங்காங்கு வாங்கிப் படித்துவிட்டு, அதைப் பற்றித் தங்கள் மகிழ்ச்சியையும், அதையொட்டி வாழ்த்துரைகளையும் எழுதித் தெரிவித்துக்கொண்டார்கள். கதையும் நல்ல கதைதான்; அதனால் உண்மையான பெருமிதம் ராஜிக்கு.

ஆனால் அந்தக் கதையையொட்டி ஏற்பட்ட தடபுடல் அவளுக்குத் தொல்லையாகக் கூடத் தோன்றலாயிற்று. எல்லோருக்கும் வந்தனம் தெரிவித்து எழுதுவது கூட கஷ்டமாக இல்லை; அவர்களுடைய அக்கரையான மற்ற வினாக்களுக்கு பதில் எழுதிக் கொண்டிருப்பது வெறும் வீண் வேலையாகத் தோன்றியது அவளுக்கு. அந்தக் கடிதங்களுக்குப் பதில் எழுதிப் போட்டாள். அப்புறம் ஒரு உறுதி செய்துகொண்டாள்.

அந்தச் சமயத்தில் அவளுக்கு உண்மையாகவே அவகாசமில்லை, கடிதங்கள் எழுதிக்கொண்டிருக்க. கற்பனைகள் தோன்றி வந்தன, அவள் மனதில். அந்தக் கற்பனைகள் வளரவும், கருத்துக்களை வரையவும் கதைகளை வரையறை செய்யவும், நிம்மதி வேண்டினாள். அமைதியை நாடினாள் அவள்.

அப்புறம் மூன்று கதைகள் வெளி வந்தன - அவை எப்போது வெளியாகின்றன என்பதைப் பற்றி யாருக்கும் முன்னதாக அவள் தெரிவிக்கவில்லை.

"இனிமேல் எழுதிக்கொண்டே இருக்கப் போகிறோம்! அவை வெளிவந்து கொண்டே இருக்கும்! ஒவ்வொன்றைப் பற்றியும் இனி எழுதிச் சாத்தியப்படுமா?" என்ற தோரணையில் இருந்துவிட்டாள்.

நான்காவது கதை பரிசுக் கதையாக வெளிவந்தது. அப்போது அவள் பிறந்தகத்திலே இருந்தாள்.

"ஏண்டி ராஜம்! இப்படி எழுதியிருக்கயே இந்தக் கதையை! உன் புக்ககத்தார் படிப்பார்களோ என்னமோ என்ற பயம் இல்லையா உனக்கு? பரிசுக்கதையா வேறே இருக்கே! அவாளுக்கு எப்பவாவது தெரியாமலா போயிடும்?" என்று ஒரு கேள்வியைக் கேட்டாள், அவள் அம்மா கதையைப் படித்ததும்.

அம்மாவின் கேள்வி சரியான கேள்விதான். அதற்கு முன்பு வந்த நான்கு கதைகளையும் 'பைலோ'டு படித்துப் பார்த்துவிட்டு முகம் மலர்ந்து அகங்குளிர்ந்த அவள், இந்தத் தடவை பீதியோடு இப்படிக் கேட்டதற்குக் காரணம் உண்டு.

அந்த நான்கு கதைகளையும் ராஜம் ஒரு 'தினுசாக' எழுதியிருந்தாள். இதை வேறு தினுசாக எழுதியிருந்தாள்.

அந்த நான்கு கதைகளும் - ராஜம் செய்த முழுக் கற்பனைச் சித்திரங்கள். கண்களால் கண்டு, காதால் கேட்டு, மனதால் கற்பனை செய்துவிட்டு, காதலையும் வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்ட கதைகளாக அவற்றை உருவாக்கி இருந்தாள். அவற்றிலே அவளுடைய உலக அனுபவம் புலனாயிற்று.

ஆனால் இந்தக் கதையிலோ அவளுடைய சொந்த அனுபவம் தான் புலனாயிற்று. குடும்ப விஷயமான கதை - நடை. அவளுடைய அனுபவத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்றை அஸ்திவாரமாக வைத்துக் கதை எழுப்பியிருந்தாள் அவள்.

அனுபவமாகிய அஸ்திவாரத்தின் மீது கற்பனை எழுப்புவது தப்பல்ல. அப்படி அனுபவம் மீது எழுப்பும் கற்பனைதான் மாளிகையாகவும் திகழலாம், கோட்டையாகவும் காட்சியளித்து அதிசயிக்கச் செய்யலாம்.

அனுபவத்தை அஸ்திவாரமாகக் கொண்ட கற்பனைதான் சிறக்கும்! ஆம்! அத்தாட்சி - இதோ அவளுக்குப் பரிசு இந்தக் கதைக்கு!

ஆனால் அவளுடைய அன்னை மகிழாதது ஏன்? ராஜம் எந்த அனுபவத்தை வைத்து எழுதினாள் என்பது அவளுக்குத் தெரிந்துவிட்டது! அதனால்தான்.

ராஜத்துக்கு அந்த அனுபவம் புக்ககத்திலே ஏற்பட்டது. அவள் மனதை ஒரு காலத்தில் புண்ணாக்கி வதைத்த கொடிய சம்பவம் அது . . .

இளம் மனதில் ஏற்பட்ட புண்ணும் நோவும் பொறுத்திருந்தாள் அவள். இப்போதெல்லாம் மனம் ஆறி கொஞ்ச கொஞ்சமாக பதப்பட்டுவிட்டது. ஆனால் . . .

ஆனால், அந்தக் கருகிப்போன உள்ளத்திற்கு பூரண குணம் ஏற்படாததால் அது வேறுவிதமாக வெளிக் கிளம்பத் தொடங்கியது.

அந்த நாளில் தனக்கு ஏற்பட்ட மனக்கசப்பை ராஜம் அன்னையிடம் மட்டும் கொஞ்சம் சாடையாகக் கூறியிருந்தாள்; வெளியில் சொல்லிக்கொள்ளவில்லை அவள். ஆனால் எழுத்து வன்மையும் கற்பனைத் திறனும் வளர்ந்துகொண்டிருந்த அவள் மனதில், அந்தச் சம்பவத்தைச் சுற்றிலும் கற்பனைக்கொடி படரலாயிற்று.... படர்ந்தது என்றே சொல்ல வேண்டும். இறுதியில் மணங்கமழும் பந்தல் ஒன்று எழும்பியது உள்ளக்கிடக்கையிலே. அந்த அழகிய பந்தலைக் கலை உணர்ச்சியுடன் பகிரங்கப்படுத்திவிட்டாள் அவள்.

அப்படிப் பகிரங்கப்படுத்து முன் யோசனையே இன்றிச் செயலில் இறங்கிவிட்டாள் என்பதும் சரியல்ல. அவளுக்கு யோசனை எழுந்தது: 'அவர்கள் படித்துவிட்டு என்ன நினைப்பார்கள்?' என்ற கேள்வி பிறந்தது.

ஆனால் ஆசையும் ஆவேசமும் அடக்கிவிட்டன கேள்வியை. "நான் பட்டபாடு கொஞ்சமா?" என்ற ஆவேசம்! "அந்தக் கஷ்ட அனுபவம் சுற்றிலும் எழுந்த இந்த அழகிய கற்பனைப் பந்த வெளியிடாமலிருப்பானேன்!" என்ற ஆசை!

கதையை எழுதி அனுப்பிவிட்டாள். அது அச்சிலே சிறப்பாக வந்துவிட்டது.

அம்மா கண்டுகொண்டாள்; சின்னச் சம்பவம் அதற்கு அஸ்திவாரம் என்று. அவள் மனம் கலங்கியது.

அம்மா காட்டிய பீதியால், ராஜம் ஏனோ தாக்குண்டது போல ரோசப்பட்டாள்.

"படித்தால் படிக்கட்டுமே அம்மா! அந்த நாளிலே என் மனசு பட்டப்பாடு அவர்களுக்கும் தான் தெரியட்டுமே! நானோ அவர்கள் முகத்துக்கெதிரே சொல்ல முடியப் போவதில்லை! என் மனசும் ஆறுவதில்லை, உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டு மறைத்தால்! இப்படி கதை மூலமாகத்தான் அவர்களுக்குச் சொல்லுகிறேனே!" என்றாள் ராஜம்!

"அவர்கள் மனதிலேயே வைத்துக்கொண்டு ஆத்திரப்படாமல் உன்னையே நேருக்கு நேர் 'என்ன அர்த்தத்திலே எழுதினாய்?" என்று கேட்டால்? அப்போ என்ன பதில் சொல்லுவாயாம்?" என்று வினவினாள் சட்டென்று அம்மா.

"அவர்களுடைய குற்றமுள்ள நெஞ்சு வாய்விட்டுக் கேட்காது! அப்படி ஒருக்கால் சாடையாகச் சாட்டி மாட்டிக் கேட்டால் அப்போ நானும் சமாளித்துக் கொள்கிறேன்! 'உங்களைப் பற்றி என்று நீங்கள் நினைக்க வேண்டாமே! உலகத்திலே இதுபோல நடக்கக்கூடாதா என்ன?" என்று சொல்கிறாப்போலச் சொல்லிக் கொள்வேன்!" என்று பதில் கொடுத்தாள் ராஜம்.

"அதென்னமோம்மா! நீ இங்கே இப்படி என்னிடம் வாயடிக்கிறாயே ஒழிய, அங்கே எப்படிச் சமாளிக்கப் போகிறாயோ! இத்தனை நாளும் சொந்த விஷயங்களிலும் அவர்களிடம் நல்ல பேர் எடுத்துவிட்டு, எழுத்து விஷயமாகவும் அவர்களைப் பெருமைப்பட வச்சூட்டு, இப்போ இப்படி ஒரு விஷயத்தை எழுதிவிட்டுப் பொல்லாப்புத் தேடிக்கொள்ள வேண்டாம்! ஏன்தான் இப்படிப் போச்சோ உனக்கு புத்தி!" என்று அங்கலாய்த்தாள் அம்மா.

"எனக்குன்னா அம்மா தெரியும், என் மனசு பட்டபாடு! இப்ப நினைச்சால்கூட பதறுகிறதே எனக்கு! அப்போதெல்லாம் எனக்குப் பொறுக்கிற சத்தியிருந்தது. பொறுத்தேன்! ஆனால் இப்போ என் மனசிலே ஒன்றும் தங்குவதில்லை! எழுதிக் கக்கினப்புறம் எனக்கு ஆறுதல் இருக்கத்தான் இருக்கு. மனசிலே வேதனையை அடக்கியே வச்சுண்டு, என்ன நல்ல பேர் வேண்டியிருக்கு!. அப்படிப்பட்ட நல்லபேர் எனக்கு வேண்டாம்! இனிமேல் நான் என்றைக்கும் பயப்படமாட்டேனம்மா! இன்றும் என்ன பயம்! ஓட ஓடத்தான் விரட்டுவா" என்று படபடத்தாள் ராஜம்!

"அதோ பார்! 'இனிமேல் என்ன பயம்' என்றுதான் நினைக்கக் கூடாது! 'தனியாகக் குடித்தனம் செய்யறாள், அலக்ஷ்யமாய் இருக்கான்னு' கட்டாயம் பெயர் வந்துடும்! என்றைக்கும் மனுஷாளோட நல்ல எண்ணம் வேணும்!" என்று போதனை செய்தாள் அம்மா!

"இனிமேல் கதை கிதைன்னு எழுதப்போறேன் நான்! நல்லது பொல்லாது நாலும் சேர்த்துத்தான் எழுதணும்! நான் இனிமேல் பயந்துப் பதுங்கிண்டு இருந்தால் முடியாது!" என்று கூறிவிட்டு உள்ளே 'விர்' ரென்று போய்விட்டாள் ராஜம்.

என்னமோ வீராப்புடன் அவள் போய்விட்டாலும், அவள் உள்ளம் குழம்பித்தான் கிடந்தது.

'ஆம்! எத்தனையோ பொறுத்துப் பொறுத்து இருந்ததெல்லாம் வீண்தானோ!' என்ற பச்சாத்தாப உணர்ச்சி தலைதூக்கியது! ஆனால் பழைய கசப்புணர்ச்சியும் எதிர் நின்றது.

'உலகம், அநியாய உலகம்! மனத்தாங்கல் வெளிவராவிட்டால், அது பொறுமை! உடனே வெளி வந்தால், அது பொல்லாத்தனம்! மெள்ளச் சூடேறி வெளிவந்து, நம் மனசுக்கும் நிம்மதி தந்து அவர்களையும் தாக்கிப் பேசாமல் ஒதுங்கி நின்றால், அது வஞ்சனை! என்ன உலகம் இது! இதிலே பயந்து பயந்து சாவானேன்? மனப்பாரம் இல்லாமல் 'பிளெயின்' ஆக இருப்பது தான் சரி!' என்றது அது.

நாட்கள் உருண்டன. மாதங்கள் சில சென்றன.

"இப்போ மன்னி முந்தி மன்னியில்லைதான்!" என்று எண்ணினார்கள் நாத்திமார்கள்.

"அவளுக்கு இவ்வளவு கல்மிஷம் இருந்ததா என்று நினைச்சால் ஆச்சரியமாயிருக்கு!" என்று சொல்லிக்கொண்டாள், மாமியார் அக்கம் பக்கத்தவரிடம்; அவர்களும் ஆமோதித்தார்கள்!

தனிக்குடித்தனம் நடத்தும் ராஜியை நேரில் கண்டு அவர்கள் பழகாமலேயே, அவளுடைய கடிதங்கள் குறுகிக்கொண்டு வருவதைப் பார்த்துச் சொல்லிக்கொண்டார்கள்.

கடிதங்கள் எழுதவும் அவகாசமில்லாமல், கதை கட்டுரைகள் எழுதுவதில் அவள் கண்ணுங் கருத்துமாய் இருக்கிறாள் என்பதை அவர்கள் அறிந்தாலும், அவர்கள் மனம் அப்படித்தான் பொல்லாப்பு சொல்லும்; அவர்கள் மனம் தாக்குண்டது அந்தக் கதையினால் என்பதை உணர்ந்தாள் ராஜம்.

அவள் இப்போது நினைத்தது என்ன!

'சரஸியின் தியாகம்' என்ற அந்தக் கதையைத் தான் எழுதாமல் இருந்திருக்கக்கூடாதா என்பது தான்! அந்தக் கதையைத் தியாகம் செய்துவிடத் தனக்கு சக்தி இருந்திருக்கலாகாதா அப்போது என்பது தான்!

அந்தக் கதையை எழுதியதுமே அவள் உள்ளத்தில் ஒரு ஆறுதல் உணர்ச்சி! அது பரிசுக் கதையாக வெளிவந்து அவளுக்குப் பெருமை கொணர்ந்து தரவே, அந்தக் கதையின் கருத்துக்குக் காரணமாயிருந்த தன் புக்கக அனுபவத்துக்கு நன்றி கூறும் உள்ளுணர்ச்சி எழுந்தது அவளுக்கு!

அன்று தொட்டு அவள் உள்ளம் மாசின்றித் தெளிந்துவிட்டது. 'அவர்கள்' விஷயத்தில் ஏற்பட்ட மனத்தாங்கல் மறைந்துவிட்டது!

ஆனால் அவர்கள் மனசு இப்போது இவளைச் சந்தேகிக்கிறது; வெறுக்கிறது! இவளுடைய கல்மிஷம் நீங்கின மனசை அவர்கள் உள்ளது உள்ளபடி உணர முடியவில்லை!

ராஜத்துக்கு அவர்கள் மேல் கோபம் இல்லை! அவர்களுடன் வேற்றுமையுணர்ச்சி ஏற்பட்டுவிட்ட தாபம்தான் அவளுக்கு.

'அந்தக் கதையைத் தியாகம் செய்ய எனக்குச் சக்தியிருக்கவில்லையே!' என்று அங்கலாய்ப்பதை, அவள் கணவன் பரிதாபத்துடன் கவனிக்கிறான்! ஏளனம் செய்வதில்லை!

'கற்பனை ஊற்று இன்பம்தான் சுரக்கச் செய்யுமா? துன்பமும் சுரக்க வைக்கும்!' என்று சொன்னால் யாராவது சந்தேகப்படப் போகிறார்கள்!

இதோ ராஜத்தின் கற்பனை உள்ளம் படும் வேதனை!

************

(பாரிஜாதம், டிசம்பர், 1947)